கொண்டிருக்கிற தாங்களேகூட கடுமையாக அப்போது எதிர்த்த நேரத்தில், நமக்கெல்லாம் 'இல்லை, இல்லை' என்று - நீதிமன்றத் தீர்ப்பே வந்து நாம் அதைப் பார்த்தாலும்கூட-அதை 'இல்லை' என்று படிக்க ஒரு அமைச்சர் இருந்தார். ஆகவே, போர்க்கால அடிப்படையில் தாங்கள் நடவடிக்கை எடுத்து, 'எங்கு செல்கிறாய் என்று பரிதியை ஒருநாள் கேட்டேன். கங்குலை * ஒழிக்க என்றான் சடுதி செல் தம்பி என்றேன்' என்பது போல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக சடுதி சென்று கங்குலை ஒழிக்க-நிலக்கரி ஊழலில் இருக்கக்கூடிய இருளைப் போக்க-உடனடியாக சி.பி.ஐ. விசாரணைக்குப் பரிந்துரை செய்து, உண்மைகளை வெளிக்கொண்டுவருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து நீண்டகாலமாகத் தமிழகத்திலே விவாதம் நடைபெற்று வருகின்றது. நிலக்கரி இறக்குமதி செய்ததில் கடந்த கால ஆட்சி தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்யத் துணை இருந்ததாகவும், அந்தத் தரமற்ற நிலக்கரியை அதிக விலை கொடுத்து வாங்கியதாகவும் ஒரு புகார் எழுந்து, அந்தப் புகாரின் அடிப்படையில் நண்பர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள்கூட வழக்கினைத் தொடுத்தார் என்பது அனைவருடைய நினைவிலும் இருக்கும் என்றே கருதுகின்றேன். அதன் பேரில் இங்கே சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென்று அன்றைய அரசு ஒரு கமிஷனை அமைத்தது; சந்துர்க்கர் கமிஷன் என்ற ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது. அந்தக் கமிஷன் செயல்படவே இல்லை. ஒருவேளை செயல்படாததற்காகவே அந்தக் கமிஷன் அமைக்கப்பட்டதோ என்று எண்ணுகிற அளவுக்கு அந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. இதற்கிடையில் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் உயர்நீதி மன்றத்திலே இந்த நிலக்கரி ஊழலை விசாரிப்பதற்கு சி.பி.ஐ. விசாரணை தேவை என்று முறையீடு செய்தார்.

முற்பகல் 10-05

இந்த ஆட்சி வந்துவிட்ட பிறகும் அந்த முறையீடு குறித்து விசாரணை நடைபெற்றபோது, மின்சார வாரியத்தின் சார்பாக, இந்த அரசின்

கருத்துப்படி, நீதிமன்றத்தில் இதை சி.பி.ஐ. இடம் ஒப்படைக்க வேண்டும் என்ற வாழப்பாடி இராமமூர்த்தியினுடைய கருத்தை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை, அதை ஏற்றுக் கொள்கிறோம் என்று எடுத்துக் கூறியதன் காரணமாக, நீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடும் என்று இன்னமும் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த அரசு, கடந்த கால அரசு நியமித்திருந்த அந்த சந்துர்க்கர் கமிஷனையும் ரத்து செய்துவிட்டது. ஏனென்றால் சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கூறும்போது, ஒரு கமிஷனைப் போட்டு குறுக்கே நந்திபோல கமிஷன் இருக்கிற காரணத்தால், விசாரணை கூடாது என்று தடுத்த அந்த நந்தியை அகற்றினால்தான் விசாரணை ஒழுங்காக நடைபெறும் என்று இந்த அரசு முன்கூட்டியே அந்த நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இப்போது நண்பர் சுப்பிரமணியன் சுவாமி அவர்கள் தொடர்ந்துள்ள இந்த வழக்கில் நீதிமன்றம் ஒரு உத்தரவு பிறப்பித்திருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். இந்த நிலக்கரிப் பிரச்சினையில் அதிகாரிகளை மீறிக் காரியங்கள் நடைபெற்றன. அதிகாரிகள் தடுத்தும் கேளாமல் எப்படி கொடைக்கானல் ஓட்டல் காரியம் நடைபெற்றதோ அதுபோல எத்தனையோ நடைபெற்றிருக்கின்றன. அவைகளிலே ஒன்றாகப் பொதுப்பணித் துறைச் செயலாளர் மறுத்தும்கூட அந்தக் காரியம் நடைபெற்றது. அவர் குறிப்பிலே எழுதினார். உயர்ந்த கலோரி அளவு கொண்ட நிலக்கரி தரக்கூடிய நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பிட்டு தமிழ்நாடு மின் வாரியம் நடந்து கொண்டுள்ளது என்று சொல்கிறார். அப்படி உயர்ந்த கலோரி அளவு கொண்ட நிலக்கரி தரக்கூடிய நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளியிலே இருந்து விலக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பிட்டு, தமிழ்நாடு மின்வாரியம் நடந்து கொண்டுள்ளது என்று குற்றச்சாட்டுக் கூறியவர் வேறு யாரும் அல்ல; பொதுப்பணித் துறையினுடைய செயலாளர். இரண்டாவதாகச் சொல்கிறார், மத்திய நிலக்கரித் துறை இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க வேண்டாம் என்று கூறுகிறது என்று. மத்திய நிலக்கரித் துறை இந்த ஒப்பந்தப் புள்ளியை ஏற்க வேண்டாம் என்று கூறிய பிறகும் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மத்திய நிலக்கரித் துறையினுடைய கருத்தையும் மீறி ஒப்பந்தப்புள்ளியை அன்றைக்கு ஏற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதையெல்லாம் மனதிலே வைத்து அன்றைய பொதுப் பணித் துறைச் செயலாளர் பல்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி 'SAIL' போன்ற நிறுவனங்கள் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகளை வாங்கும்போது கடைப்பிடிக்கும்

நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற குறிப்பு எழுதியுள்ளார். அவைகளைப் பின்பற்றாமல் ஆணை வழங்கப்பட்டு இந்த நிலக்கரி ஊழல், இந்த மோசடி நடைபெற்றிருக்கின்றது.

நேற்றைய தினம் வெளிவந்த செய்திக்குப் பிறகு, நீதி மன்றத்தினுடைய செய்திக்குப் பிறகு, நேற்று இரவு நடைபெற்ற நிகழ்ச்சியை நான் இங்கு சொல்லியாக வேண்டும். வன்முறையைப் பற்றி இங்கே எல்லோரும் பேசினீர்கள். குண்டு வெடிப்பதைப் பற்றி இங்கு பலரும் பேசினீர்கள். ஆனால் இந்த நிலக்கரி ஊழல் நடைபெற்ற நேரத்திலே தலைமைச் செயலாளராக இருந்த திரு. டி.வி. வெங்கட்ராமன், இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் எங்கே உண்மைகளை வெளியிட்டுவிடுவாரோ என்ற அச்சத்தில் நேற்று இரவு அவருடைய வீட்டிலே புகுந்து குண்டர்கள் 7, 8 பேர் அவரைக் கட்டிப் போட்டு நையப் புடைத்து, அவர் இன்று காலையிலே 'மலர் மருத்துமனை'க்குச் சென்று இருக்கிறார். 'ரெக்கார்டுகளைக்கொடு. எங்களுக்கு எதிராக நீ அவர்களோடு சேர்ந்துவிடக் கூடாது, ரெக்கார்டுகளை எல்லாம் கொடு' என்று மிரட்டப்பட்டிருக்கிறார். ஒருவேளை அவரும் அதிலே சேர்ந்து இருந்த காரணத்தால், அவருக்கு இந்த இரகசியங்கள் எல்லாம் தெரியும் என்ற அந்த நிலையிலே தாக்கப்பட்டு இருக்கிறார். அவருடைய மகனும் தாக்கப்பட்டு இருக்கின்றார். இப்படிப்பட்ட கொடுமை, அராஜகம் இந்த ஆட்சி வந்த பிறகும் நடைபெறுகிறது என்பதால் நான் வெட்கப்படுகிறேன். நான் நியாயப்படுத்த விரும்பவில்லை. அதற்கு சமாதானம் கூற விரும்பவில்லை. இந்த ஆட்சி வந்த பிறகும்கூட இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியும் என்று சில குண்டர்கள் தூண்டிவிடப்படுகிறார்கள் என்றால், தாங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக தங்களோடு சேர்ந்து இருந்தவர்கள், இந்தக் காரியத்திலே ஈடுபட்டவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றால், அது எவ்வளவு கொடூரமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே செய்த அநியாயங்களுக்குப் பதில் கிடைத்துவிட்டவர்களுக்கு, தொடர்ந்து செய்கின்ற அநியாயங்களுக்கும் பதில் நிச்சயமாகக் கிடைக்கத்தான் போகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாத்திரம் எடுத்துக்கூறி அமைகின்றேன். நன்றி.